பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

# உதயன்

விலை ரூபா 3/50

Se liah
Sivapathalingam
GEM & JEWELS MERCHANT
218H, Kasthuriar Road
Jaffna.
T. Phone: 23794

சுடர்: 5 சுக்கில ஹூ மாசி மீ 06 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 21 (18-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 12

## மாகாண சபையைக் கலைத்து

# விரைவில் தேர்தல் நடத்துவதுபற்றி பேசவே

# ஏனைய குழுக்களுக்கு கலைஞர் அழைப்பு

### சென்னையில் வெளியான தகவல்

— சென்னையிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

சென்னை, பெப். 18

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்து, புதிதாகத் தேர்தல்களை நடத்துவதற்கு உள்ள வாய்ப்புக்கள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த மற்றைய குழுக்களைத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சென்னைக்கு அழைத்திருக்கிறார்.

உடனடியாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டால் அதில் பங்குபற்றுவது தொடர்பாக ஏனைய குழுக்களின் கருத்துக்களை அறிவதில் கலைஞர் சிரத்தை கொண்டிருப்பதாக சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

''மாகாணசபையை உடனடியாகக் கலைத்து, அதற்கான தேர்தல்களை நடத்துவதுபற்றி கலைஞர் கருணாநிதி எங்களுடன் பேசினார்.'' என்று கலைஞருடனான பேச்சுக்களில் பங்குபற்றிய விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

''தேர்தல்களில் பங்குபற்ற நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் தேர்தல்களில் பங்குபற்றுவதில் சில தடங்கல்கள் இருக்கின்றன. இதுபற்றி மற்றக் குழுக்களுடன் பேசுவதற்காகவே அவர்களை கலைஞர் அழைத்திருக்கிறார் என நாங்கள் நினைக்கிறோம்'' — என்றும் அந்தப் பிரமுகர் மேலும் சொன்னார். (உ)

### கலைஞர் - புலிகள் பேச்சில் 'உதயன்' பற்றி பிரஸ்தாபம்

சென்னை, பெப்ரவரி 18

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது ''உதயன்'' பத்திரிகை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் அண்மையில் வெளியான உதயன் பத்திரிகைகள் சிலவற்றை தமது பக்க பேச்சுகளுக்கு ஆதாரமாகச் சமர்ப்பித்தார்கள் என்றும் -

கலைஞர் கருணாநிதி அந்தப் பத்திரிகைகளை வாங்கி அங்கேயே வாசித்து அறிந்து கொண்டார் என்றும் -

பேச்சுக்களின் முடிவில் அந்தப் பத்திரிகைகளை கலைஞர் தம்முடன் எடுத்துச் சென்றார் என்றும் -

பேச்சுக்களில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட அல்லது விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த மாற்றுக் குழுக்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான தமிழ்இளைஞர்களை பொதுமக்கள் முன்னிலையில் விடுதலைப் புலிகள் விடுவித்தனர் என்ற செய்தி வெளியான 14-02 1990 ஆம் திகதி உதயன் பத்திரிகையே பேச்சுக்களின் போதுபிரஸ்தாபிக்கப்பட்ட பத்திரிகைகளுள் முக்கியமாக இடம் பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஏனைய தமிழ் குழுக்களுடனும் தமிழக முதல்வர் பேச்சு!

சென்னை, பெப். 18

தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த இதர இலங்கைத் தமிழ் அமைப்புக்களுடன் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்றிரவு பேச்சுக்களை நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக்குழுவுடன் திரு. கருணாநிதி இரண்டாம் நாளாக நேற்றுப் பகல் பேச்சுக்களை நடத்தினார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போதே மேற்கண்ட தகவலை திரு. கருணாநிதி வெளியிட்டார்.

ஈ. பீ. ஆர். எல். எவ். ஈ. என். டி. எல். எவ்., டெலோ, புளொட், ஈரோஸ்

(6-ஆம் பக்கம் பார்க்க)

### கலைஞருடன் பேச ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சாந்தன்

திருகோணமலை, பெப். 18

கலைஞர் கருணாநிதியுடனான பேச்சுக்களின்போது ஈ- பி. ஆர். எல். எவ்வின் சார்பில் சென்னையில் உள்ள அந்த அமைப்பின் பிரமுகர் திரு. சாந்தன் தலைமையில் தூதுக்குழு ஒன்று பங்குபற்றும்.

திருகோணமலையில் ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

### ஜனநாயகப் பாதைக்கு வர விடுதலைப் புலிகள் தயார்!

#### கலைஞர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, பெப். 18

'ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இப்போது தயாராக உள்ளது. ஜனநாயகப் பாதைக்கு அவர்கள் வருவதில், இயக்கத்துக்கு இருக்கிற சிக்கல்கள் பற்றி இப்பொழுது கூறமுடியாது.'' — இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சொன்னார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான தமது பேச்சுக்களை நேற்று முடித்துக் கொண்ட பின்னர், கலைஞர் கருணாநிதி பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் பல்லாண்டு

(6-ஆம் பக்கம் பார்க்க)

### லெபனான், மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற

# 25 ஆயிரம் இலங்கைப் பெண்கள் குறித்து தகவல் பெறமுடியாத நிலை!

கொழும்பு, பெப்.18

லெபனான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புத்தேடிச் சென்றுள்ள சுமார் 25 ஆயிரம் இலங்கைப் பெண்கள் குறித்து சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் பெறமுடியாத உறவினர்கள் தினசரி வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகத்தின் உதவியை நாடி வருகின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அங்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளோர் குறித்துச் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலரின் நிலைமை குறித்து விசாரித்து தகவல் பெற்றுத் தரும்படி வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியகத்துக்குத் தினசரி நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்து வருவதாகவும்—

ஆனால் அது தொடர்பாக

(6-ஆம் பக்கம் பார்க்க)

### பயிலுநர் ஆசிரியர்களுக்கு மார்ச் 1இல் நியமனக் கடிதம்

கொழும்பு, பெப். 18

வடக்கு, கிழக்கில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு எதிர் வரும் முதலாம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்,

கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ்கொழும்பில்நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

இந்த நியமனங்கள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் கூட்டம் ஒன்றை இந்த வாரத்தில் தாம் கொழும்பில் கூட்டவிருப்பதாகவும் அவர் சொன்னார். (உ)

### கடந்த சில தினங்களில் கொழும்பில்

## கைதான இளைஞர்களை செல்லச்சாமி பார்வையிட்டார்

கொழும்பு, பெப் 18

கடந்த சில தினங்களில் கைதாகி கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையம், வெலிக்கடைச் சிறை ஆகிய இடங்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை போக்குவரத்துத் துணை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி பார்வையிட்டார்.

பாதுகாப்புத் துணை அமைச்சரான திரு. ரஞ்சன் விஜேரத்னாவின் அனுமதியைப் பெற்ற பின்னரே இளைஞர்களைத் தான் பார்வையிட்டதாக திரு. செல்லச்சாமி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தில் 76 தமிழ் இளைஞர்களும் வெலிக்கடைச் சிறையில் 173 தமிழ் இளைஞர்களும் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் பெரும்பாலோர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து கொழும்பு வந்தவர்கள் என்று அமைச்சர் சொன்னார்.

விசாரணையின் பின்னர் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படுவர் என்று அமைச்சர் விஜேரத்னா உறுதியளித்தார் என்றும் திரு. செல்லச்சாமி குறிப்பிட்டார்.

### 3 ரூபா இனி இல்லை

கொழும்பு, பெப். 18

மாணவருக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பெற்றோருக்கு தலா 3 ரூபா வழங்கும் நடைமுறையை ரத்துச் செய்வது என்று அரசு தீர்மானித்துள்ளது.

இதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட பெற்றோருக்கு அந்தந்தப் பாடசாலை ஊடாக உணவு முத்திரையை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

பெற்றோருக்குப் பணம் வழங்கும் திட்டத்தில் சீர்கேடுகள் இடம்பெறுவது கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்தே இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. (அ-எ)

### திருமலையில் கொள்ளை

திருகோணமலை, பெப். 18

திருகோணமலையில் இரவு வேளைகளில் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன.

பீதி அடைந்த பொதுமக்கள் மாலை ஆறு மணியுடன் வீடுகளுக்குள் முடங்கி விடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

### முச்சந்தி முரளி



மூண்டு ரூபா கொடுக்கிற திலை ஊழல் எண்டு அதை நிறுத்தினா, அப்ப மதிய போசனம் குடுப்பதையும் நிறுத்தி விடுவினமோ பின்னை ...!

### யாழ்.மாநகரசபைப் பகுதியில்

## ரூபா 1 கோடி செலவில் மின்இணைப்புகள் புனரமைப்பு

யாழ்- மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் 100 இலட்சம் (ரூ. 1 கோடி) செலவில் மின் இணைப்புக்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்தகால வன்செயல்களின்போதுஇவைசேதமடைந்திருந்தன.

இவற்றைப் புனரமைக்க புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட 100 இலட்சம் ரூபாவில் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

தற்சமயம் பாஷையூர், பண்ணை உப- மின்நிலையங்களுக்கு புதிய உபகரணங்களைப் பொருத்தி திருத்தி அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

அத்துடன் செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, முத்தமிழ் வீதி, பழையபூங்கா வீதி, பாஷையூர் கடற்கரை வீதி ஆகியவற்றுக்கு கூடிய வலு ஊட்டக்கூடிய கம்பிகள் பொருத்தப்பட்டு வருகின்றன. (இ-3)

### அரச அதிபர் மாநாடு

யாழ்ப்பாணம் பெப். 18

நாட்டில் உள்ள அரச அதிபர்களுக்கான மாநாடு ஒன்று கொழும்பில் எதிர்வரும் 27-ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

பொது நிர்வாகத்துறை அமைச்சில் இம்மாநாடு நடைபெறும். (3)

## ஆயுதங்களை ஒப்படைத்ததன்மூலம் தவறு இழைத்துவிட்டோம்- ஈரோஸ் பாலகுமாரன்

கொழும்பு, பெப் 18

நடந்ததைத் திரும்பிப் பார்க்கையில் நாம் தவறிழைத்துவிட்டோம் என்பது நமக்குத் தெரிகிறது.

ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

திரு. பாலகுமாரன் தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாம் இந்திய - இலங்கை உடன்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அதனை இடைக்கால நடவடிக்கையாக ஏற்று எமது ஆயுதங்களை ஒப்படைத்தோம்.

இது நாம் விட்ட மிகப் பெரிய தவறு.

இதனால் நாம் புளொட், ஈ. என். டி. எல். எப்., ஈ. பி. ஆர். எல். எப். ஆகிய ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு இலக்காக வேண்டியதாயிற்று.

எம்மவரை அழிக்கும் நடவடிக்கையில் அவர்கள் இறங்கினார்கள். 100 க்கு அதிகமான எம்மவர் உயிரிழந்தனர்.

ஆயுதம் இல்லாத அரசியலை நாம் நம்பினோம்.

#### மத்தியஸ்த முயற்சி

1987 இல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியப் படை தாக்குதலை ஆரம்பித்த போது அவர்களுக்கு இடையே மத்தியஸ்தம் செய்ய எம்மால் முடியும் என்று நாம் நம்பினோம். அதனால் பலன் ஏதும் இடைக்கவில்லை, மதில் மேற் பூனையாக இருப்பதாக எம்மீது குற்றஞ் சாட்டப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18 — 02 — 1990

ஞாயிற்றுக்கிழமை மாசி 6

சுபநேரம்:
9 . 32 முதல் 11 . 02 வரை

ராகுகாலம்:
5 . 02 முதல் 6 . 32 வரை

அட்டமி - நவமி

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

யமகா YB 100 விற்பனைக்கு உண்டு பார்வையிடலாம் 9மணியிலிருந்து 12 மணி வரை 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. நல்ல நிற லவ் பேட்ஸ் விற்பனைக்கு உண்டு 114, 3ஆம் குறுக்குத் தெரு, மணிப்புரி, கொழும்புத் துறை. (2562)

நல்ல இன பாற்பசுவும், பெரும் தொகையான புளியம் விறகுகளும் நீப்பைக்கு அரியக்கூடிய நேரான விளா மரமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.V. சூரியர், கல்லூரி வீதி, No: 10 கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (2557)

புது இன அழகான வளர்ப்பு மீன்களும் Alsation, Pomenarian. German. Shepherd இன நாய்களும் விற்பனைக்குண்டு. மீனுக்குரிய கண்ணாடி தொட்டிகளையும் உணவையும் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: சி. பவேந்திரா, 47, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (2566)

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Unsex தனிசிகப்பு, கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்) சறுப்பு வரிசேவல் (Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (21-02-90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: இல-9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (11819)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள் Golden Comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய் புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11818)

## வளவு விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச் சந்தி அருகில் 8 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் V. போல், யாழ்ப்பாணக் கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (2571)

## வீடு வளவு விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் வீடும், 6 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. அம்பாள் அரிசி ஆலை பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. (2567)

## தேவை

நல்ல தரமுள்ள சரஸ்வதி வீணை தேவை. தகுதியைப் பொறுத்துப் பணம் கொடுக்கலாம். தொடர்பு கொள்ளவும்: M. S. Ponnudurai, 52/2, Stanley Road Jaffna. (2563)

அச்சுவேலியிலிருந்து தினமும் விற்பனைக்குச் செல்லும் வாகனம், ஓட்ட அனுபவம் உள்ள சாரதி தேவை. அச்சுவேலியில் அல்லது அச்சுவேலிக்கு அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவ விபரங்களுடனும், இரு நற்சான்றுகளுடனும் 25-2-90க்கு முன் விண்ணப்பிக்கவும். No: 623, C/o உதயன், யாழ்ப்பாணம். (C/3870)

## FOR SALE

Reconditioned Honda Chaly மலிவான விலைகளில் 16 3rd, Cross Street, Jaffna. (C-3867)

## மணமக்கள் தேவை

சைவ வேளாள குல றாஸ்மன் ஆக வேலை பார்க்கும் 37 வயது மகனுக்கு வேலை பார்க்கும் அழகிய மணமகள் தேவை. படித்து ஆசிரியராக இருக்கும் 25வயதுப் பெண்ணுக்குப் படித்த லண்டன் மணமகன் தேவை. சாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: No. 622, C/o உதயன் யாழ்ப்பாணம். (2558)

A B C D E ஸ்தாபனத்தில் பட்டதாரி மணமக்களும் Bank உத்தியோகஸ்தரும் வேறு சில உத்தியோகஸ்தரும், செவ்வாய் குற்றத்திலும், குற்ற மற்றவரும் இருப்பதினால் திருமணம் செய்ய உத்தேசித்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். A B C D E, 328, நாவலர் றோட். (2560)

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள சிவில் எஞ்ஜினியர் மணமகனுக்கு செவ்வாய்க் குற்ற மற்ற பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. விபரங்களுக்கு: A B C D E, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (2561)

யாழ். இந்து வேளாளர் உயர் குலத்தைச் சேர்ந்த பெற்றோர் 34 வயது நிரம்பிய லண்டனில் வசிக்கும் யாழ் பல்கலைக்கழக B.Sc பட்டதாரியும் I. C. M. A கணக்காளருமாகிய மகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த உகந்த மணமகளைத் தேடுகின்றனர் I. C. M. A கணக்காளர் அல்லது Stage II சித்தி அடைந்தவர்கள் விரும்பத்தக்கது. சாதகம் மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 621, C/o உதயன். (2548)

யாழ், இந்துவேளாள பரம்பரையைச் சேர்ந்த வயது 29, அதிகுறைந்த கிரகபாவம் உடைய (½ கிரகபாவம் அல்லது 42) ஜேர்மனியில் நிரந்தர விசா உடையவரும் திருமணத்தின் பின் பெண்ணை அங்கு கூட்டி செல்ல ஏற்ற ஒழுங்குகளுடன் இருப்பவருக்கேற்ற மணமகள் தேவை. சீதனம் மற்றும் விபரங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும். 219, Robin Hard Ware, Stanley Road, Jaffna. (2543)

## கல்வி

A/L Accountancy கம்பனி முடிவுக் கணக்குகளும் பகுப்பாய்வு ஆசிரியர் க. தங்கராஜா B. Sc (P.F.T.) SP. Dip. in Ed. கிடைக்குமிடம் யாழ்நகர் புத்தகசாலைகள். தொகையாக வாங்குவோருக்கு விசேட கழிவு. (2539)

## வாடகைக்கு

கோப்பாய் சந்தியில் கூல் பார் ஒன்று வாடகைக்கு விடப்படும். அத்துடன் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு S. இராமகிருஷ்ணன் பூதர்மட ஒழுங்கை, நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (11817)

## போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

## ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 21-02-1990 திங்கள், புதன், வெள்ளி நாட்களில் மாலை 4மணி — 5/30 மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (11803)

## NEW EDITION

G. C. E (O/L) English Language model question papers Part I & II (new syllabus) with Solutions, Including, model essays and letters Publishers: K. V. Printers, Jaffna. (2551)

## SAAIRAAM

கலர்T. V, கறுப்புவெள்ளை T.V 12'',14'', 17''Savegard மற்றும் புதிய அல்லது பழைய அலுமாரி, சோக்கேஸ், கட்டில் மற்றும் வீட்டுப் பொருட்கள் உடன் விற்பனைக்கு உண்டு, Saairaam 3ஆம் கட்டை, பருத்தித்துறைவீதி, கல்வியன்காடு. (2517)

## பயிற்சிகள்

Radio T. V. Air Conditioning Refrigeration Wiring வெல்டிங் வைண்டிங் மோட்டர் மெக்கானிசம் பிளம்பிங் Typing Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. [2299]

# உடனடி வேலைவாய்ப்புகள்

## ● சவூதி அரேபியா

பின்வரும் வெற்றிடங்களுக்கு சவூதி அரேபியாவில் பிரபல்யமான கொம்பனி ஒன்றிற்கு இம்மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை வெளிநாட்டவரால் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. விரும்புவோர் உடன் கடவுச்சீட்டு, 3 படங்கள், சான்றிதழ்கள் என்பனவற்றுடன் நேரில் வரவும்.

| | | |
|---|---|---|
| Labourers | — | 520 SR |
| பிளம்பர் (Plumber) | — | 670 SR |
| பிளாஸ்ரெறர் (Plasterer) | — | 670 SR |
| ஸ்ரீல் பிக்சர் (Steel Fixer) | — | 670 SR |
| மேசன் (Mason) | — | 570 SR |
| மெக்கானிக் (Mechanic) | — | 720 SR |
| மெக்கானிக் டீசல் (Mechanic Diesel) | — | 720 SR |
| பெயின்ரர் (Painter) | — | 670 SR |
| சாரதிகள் (Driver) H.V | — | 750 SR |
| ரெயிலர் டிரைவர் | — | 850 SR |
| Crane Operator(கிரான் ஒப்பறேற்ரர்) | — | (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்) |
| Computer Operator | — | (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்) |

வயது 21 இற்கு மேல்

வீட்டுப் பணிப்பெண்கள் 3500/- இலங்கை ரூபா

**156, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக) (C/3878)

## Win Inn Ladies Academy

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம். விஞ்ஞானரீதியிலான மனையியல் வகுப்புகளும் கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகளாகிய வயலின், வீணை, கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு பரத நாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் காலை 9 மணி - 12 மணி. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (11810)

## வருடாந்த இல்ல விளையாட்டு

அச்சுவேலி, பெப் 18

அச்சுவேலி தோப்பு அருணந்திவித்தியாலயவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 21 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும்.

மெய்வல்லுநர் போட்டிகளுக்கு மருதனாமடம் கோட்டக்கல்வி அதிகாரிதிரு. இ.க.குலசேகரம் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களைவழங்குவார். (இ-11)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
24-12-1924

●

மறைவு:
23-02-1984

அமரர் திரு.

**நாகமணி அருமைநாயகம்** அவர்கள்

(முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியரும், ஆத்மஜோதி அச்சக உரிமையாளரும், சமாதான நீதவானுமாவார்)

திதி: 18-02-1990

ஆறு ஆண்டுகள் தான் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எமது நெஞ்சங்களை விட்டு ஒருபோதும் அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்புடன் மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மருமகள், பேத்தி,

''குருபவனம்''
கண்டிறோட்,
சாவகச்சேரி. (C/3395)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



## திரு. க. வி. நடராசா

(முன்னாள் வியாபாரி — யாழ்ப்பாணம்)

தோற்றம்: 02 - 10 - 1919 மறைவு: 18 - 08 - 1989

குடும்பத்தின் ஒளிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே! கருணையின் பெருங்கடலே! அயராது உழைத்து எம்மையெல்லாம் உயரவைத்த உத்தமரே! எங்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்களே! எங்களை விட்டுச் சென்று ஆறுமாதம் சென்றாலும் உங்கள் அன்பு நீண்டு செல்லுதையா! உடல், பொருள், ஆவி அத்தனையும் எங்களுக்காக அர்ப்பணித்த உங்களை நாங்கள் நினைவு கொள்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

தாயார், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

43/1, அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் யாழ்ப்பாணம். [11809]

# கேள்வி விண்ணப்ப அறிவித்தல்

தேசிய உப்புக் கூட்டுத்தாபன வடபிராந்திய உப்புப்பாத்திகளில் இருக்கும் உப்பை, உப்பு மேடைகளுக்கு. உழவு இயந்திரப் பெட்டிகளில் ஏற்றிப்பறிப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பப் படிவங்களை, கூட்டுத்தாபன வடபிராந்திய காரியாலயம், ஆனையிறவில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவம் வழங்கும் கடைசித் திகதி: 28-02-1990**
**விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி: 12-03-1990**

மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்தில் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

வடபிராந்திய முகாமையாளர்
தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்.

வடபிராந்தியக் காரியாலயம்,
ஆனையிறவு. (C/3883)

# T V
# TRAVELS & TOURIST
# உடனடி வேலைவாய்ப்பு

## ★ KUWAIT ★

[பிரபல போக்குவரத்துக் கம்பனியில் வேலைவாய்ப்பு]

| | | | |
|---|---|---|---|
| 1. | கனரக சாரதிகள் | 60 பேர் | 70 டினார் |
| 2. | சாதாரண வாகன சாரதிகள் | 40 பேர் | 55 டினார் |
| 3. | ரயர் பிற்றர் | 03 பேர் | 50 டினார் |
| 4. | பெண் செக்ரட்டறி | 01 ஆள் | 90 டினார் |
| 5. | டீசல் மெக்கானிக் | 05 பேர் | 90 டினார் |
| 6. | பெண் கிளீனேர்ஸ் | 50 பேர் | 30 டினார் |

ஒன்றரை மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம். கடவுச்சீட்டு 3 பாஸ்போட் சைஸ் படம், அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

● மற்றும் குவைத் நாட்டிற்கு பணிப்பெண்களாக செல்வோருக்கு இரு வாரத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

**வயது எல்லை ஆண்கள் 20—47 வரை**
**பெண்கள் 30—45 வரை**

## ★ SAUDI ARABIA ★

| | | |
|---|---|---|
| 1. | Cleaner | 400 SR |
| 2. | Plumber | 550 SR |
| 3. | Electrician | 550 SR |
| 4. | Carpenter | 550 SR |
| 5. | Civil Engineer | 1200 SR |
| 6. | Electric Engineer | 1700 SR |
| 7. | Telephone Technician | 1000 SR |
| 8. | Painter | 550 SR |
| 9. | Waiter | 375 SR |

கடவுச்சீட்டு, 3 படம் அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் எமது காரியாலயத்தோடு நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை 21 — 47 வரை

**Front of Railway Station Brown Road, KOKUVIL.**

[சி-3876]

# ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
11 - 4 - 1966

●

முருகன் திருவடியில்:
01 - 3 - 1989

திதி: 18 - 2 - 1990

## நடேசன் மணிவண்ணன்

(கிழக்குப் பல்கலைக்கழக விவசாயபீட மாணவன்)

எங்கள் அம்மையும் அப்பனுமான நல்லூர்க் கந்தரே, உமது அலங்காரக் கோலங்களில், ஊனினை உருக்கும் தோத்திர கானங்களில் நினைவு மாறாத கண்மணி மணிவண்ணனைக் காட்டுகின்றீர், அவனது எழிலான தோற்றம், கன்னக்குழிகள், கல்வி, கலை சித்திகள் அனைத்தும் உமது அருள் வண்ணங்கள் அருளிய வண்ணம் அனைத்தும் கொண்டீர். நீர் எம்முடன் இருப்பதால், அவனும் எம்முடன் இருக்கின்றான் வேறொன்றும் அறியோம் சாந்திபெற அடைக்கலம்.

நடேசன் குடும்பம்.

செந்தில்,
நவாலி. (11812)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து.

**பொருள்:**

இகழ்ந்து எள்ளாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே உவகை அடையும் தன்மையுடையதாகும்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

18-02-1990  த. பெ.  இலக்கம் : 23


## மனித உரிமை மீறல்

இலங்கை அரசாங்க ஆயுதப்படைகள் மனித அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த வருடம் ஜூன் மாதத்தில் அவசரகாலச் சட்டம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் ஆயுதப்படையினர், ஜே. வி. பிக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளின் போது, ஆயிரக்கணக்கானோர் காணாமற் போய்விட்டனர்; ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டு விட்டனர்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை தனது ஆகப்பிந்திய அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது; கண்டித்துள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நிராகரித்துள்ளார். குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை, ஆதாரமற்றவை என்று நிராகரித்திருக்கிருக்கிறார். அவற்றை நிரூபிக்க முடியுமா என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கேள்வி எழுப்பி இருக்கிறார் வேறு.

இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுவதாக, மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டுவதும், அரச அமைச்சர்கள் அதனை மறுப்பதும் கடந்த பத்து வருடங்களாக வழக்கமாகி விட்டது. குற்றச்சாட்டையும், கண்டனத்தையும் கண்டதும், இலங்கை அமைச்சர்கள் சீறிப் பாய்வதும், சபை மீது சேற்றை அள்ளி வீசுவதும் அடிக்கடி செய்திகளாகின்றன.

தமிழ் இளைஞர்கள் தடுப்பு முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டும், பல அப்பாவிகள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் விசாரணை இன்றிக் கைது செய்யப்பட்டும், விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கொல்லப்பட்டும் காணாமற் போயும் போனது குறித்து மன்னிப்புச் சபை முன்னர் பல தடவைகள் அறிக்கைகள் வெளியிட்டது. அப்போதும் அவை பொய்யானவை, ஆதாரமற்றவை என்று மறுத்தான் போட்டவர் அமைச்சர் அத்துலத். 25 ரூபாவுக்குப் பெறப்பட்ட அத்தாட்சி பத்திரங்களுடன் மன்னிப்புச் சபை குற்றச்சாட்டுக்களைப் புனைந்ததாகக் கிண்டல் செய்தவர் அவர். சபை தனது பணியைக் கைவிடாமல், மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து சுட்டிக் காட்டியபோது, புட்டுக் காட்டிய போது, நிலை கொள்ள முடியாத நிலையில் குற்றச் சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபிக்கப்போவதாகச் சவால் விட்டு அதனைச் சாதிக்க முடியாமல் களைத்துப் போனவர் அத்துலத்.

இப்போது சிங்கள இளைஞர்கள், மக்கள் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை மறுதலிப்பதிலும், மன்னிப்புச் சபை பயங்கரவாதத்துக்கு நிதி உதவுகிறது என்பது போன்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துச் சேறு பூசுவதிலும் அமைச்சர் ரஞ்சன் ஈடுபட்டு வருகிறார்.

தமிழ் இளைஞர்கள், மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் பொய்யானவை அல்ல; நிச்சயமாக நிகழ்ந்தவை. மிகப் பலவும் குறைத்துக் கூறப்பட்டவை என்றே சொல்லலாம். மிகைப்படுத்தப்பட்டவை என்று தட்டிக் கழித்து முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைக்க முடியாது.

ஆயுதப் படையினருக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்களைக் கொடுத்தால், அவற்றைப் பயன்படுத்தி அவர்கள் கொடுமை செய்வது வழக்கம். ஆயுதப்படையினரின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்த முடியாத கட்டத்தில், உண்மையைச் சொன்னால் கோபம் வரும் நிலையை அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கிறது.

தவறைத் தனது பக்கத்தில் வைத்துக் கொண்டு உண்மைகளை மறைக்க நினைப்பதும், அவற்றை வெளிப்படுத்துவோரைக் கண்டிப்பதும் அர்த்தமற்றது. நெருப்பில்லாமல் புகையாது. உண்மைக்கு அழிவில்லை. அது உறங்குவதில்லை. இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் அது வெளிப்படும்.

அடுத்த வாரம் ஜெனிவாவில் நடக்க இருக்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கையின் அத்துமீறல் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட இருக்கிறது. வெளிநாட்டு உதவி கிடைப்பதற்கு, மனித உரிமை மீறல்கள் நடக்கவில்லை என்று நிரூபிக்கும் பெரும் பொறுப்பு அரசின் தலையில் விழுந்துள்ளது.

இப்படியான இக்கட்டும், நெருக்கடியும் வரும் என்பது தெரிந்தாவது ஆயுதப்படையினருக்கு வழங்கும் அளவுக்கு மீறிய அதிகாரங்களை இனியாவது அரசு கட்டுப்படுத்தக் கூடாதா? தினை விதைத்தால் தினை அறுக்கலாம்; வினை விதைத்தால் வினையைத் தானே அறுக்க வேண்டும்!

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆயுதப் படையினருக்கு வழங்கிய கொடிய அதிகாரங்கள் சில இரண்டு தினங்களுக்கு முன்னர் நீக்கப்பட்டுள்ளன. அந்த ஆரம்பத்துடன் மனிதஉரிமை பேணும் வழியில் அரசு தொடர்ந்து செல்ல வேண்டும்.

### யாழ் பொலிஸ் நிலைய

## முறைப்பாடுகள் எழுத்துமூலம்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் அனைத்தும் எழுத்துமூலமே பதியப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள கார்ட் சேத விவரம் ஆகிய முறைப்பாடுகள் மட்டுமே ''ரைப்பிங்'' செய்திருந்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய முறைப்பாடுகள் பொலிஸ் நிலையம் சென்று பொலிஸாரின் எழுத்து மூலமே பதியப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

### யாழ் பல்கலைக் கழக வைத்திய பீடம்

## போதிய விரிவுரையாளர்கள் இல்லாததால் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்-பல்கலைக்கழக வைத்திய பீடத்துக்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை. இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பீடத்தில் கடமையாற்றிய விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றதே இந்த நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய விரிவுரையாளர்களை தெரிவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பலன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### யாழ் மாவட்டத்தில்

## மா தட்டுப்பாட்டை நீக்குவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்குடா நாட்டில் மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குமுகமாக மேலும் கப்பல்மூலம் மா எடுத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உணவுத் திணைக்கள களஞ்சியங்களில் மா இருப்பு இல்லாததால் கப்பல் வந்ததும் உடனடியாக ப. நோ. கூ. சங்கங்களுக்கு மா விநியோகிக்கப்படுகிறது.

தட்டுப்பாடு நிலவுவதற்கு இதுவே காரணம் ஆகும்.

இந்நிலையை நீக்குமுகமாக அடுத்த வாரமளவில் பெருமளவில் மாவை கப்பல்மூலம் எடுத்துவர முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் வியாழனன்று 1000 தொன் மாவுடன் ஒரு கப்பல் காங்கேசன் துறை முகத்தை வந்தடைந்தது. (இ-3)

## விடுதலையான இளைஞருக்கு உதவி

யாழ்ப்பாணம், பெப். 18

தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலையான இளைஞர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் உடுபுடைவைப் பொதிகளைப் பெற்றுள்ளனர்.

இவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (-10)

## கோப்பாய் முதலிடம்

கோப்பாய், பெப். 18

குழந்தைக்கு தடுப்பு ஊசி போடும் திறன் போட்டியில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டு வெகுமதி ஒன்றும் வழங்கப்பட்டது.

இலங்கையில் உள்ள 105 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இப்போட்டி நடத்தப்பட்டது.

இதில் 10 சுகாதார பிரிவுகள் தேர்ந்து எடுக்கப்பட்டன. இதில் யாழ்மாவட்டத்தில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவு மாத்திரமே இடம்பெற்றுள்ளது. (இ-72)

### ரூ. 1500 மாத வருமானமுடைய

## பாதிப்புற்றோர் வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கடன்!

### வீடமைப்பு அபி. நிதி கூட்டுத்தாபனம் வழங்கும்

யாழ்ப்பாணம், பெப். 18

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானம் உள்ள பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை நிர்மாணிப்பதற்கான கடன்களை வழங்குவதற்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

''வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருந்தி நிதிக்கூட்டுத்தாபனம்'' இக்கடன்கள வழங்கும்.

1,500 ரூபாவுக்கும், 5,000 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாத வருமானம் உள்ளவர்கள் 50 ஆயிரம் ரூபா வரை கடன் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வகைக்கடன் இருபிணையாளர்கள் பிணை நிற்பதன் மூலம் வழங்கப்படும்.

ரூபா 5,000 ற்கு மேற்பட்ட வருமானமுள்ளவர்கட்கு ஒன்றரை லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படும். ஆதனத்தை ஈடு வைப்பதன் மூலம் அல்லது அதற்கு பெறுமதியான காப்புறுதியைச் சாட்டுதல் செய்வதன் மூலம் இந்தவகைக்கடன் வழங்கப்படும்.

இந்த இரு வகைக் கடன்களும் 15 ஆண்டுகளுள் மாதம் மாதம் திருப்பி செலுத்தப்படல் வேண்டும். ஆண்டு ஒன்றிற்கு 6வீத வட்டி அறவிடப்படும். இது தொடர்பான சகல விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விபரங்களையும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (உ)

## பொருள்களைத் திருடி விற்ற சிலர் பிடிபட்டனர்

அச்சுவேலி செ 18

நீர் இறைக்கும் இயந்திரம் சைக்கிள்கள் வீடியோ நாடாக்கள் ஆகியவற்றைக் கடந்த காலங்களில் திருடி விற்றுவந்ததாகக் கூறப்படும் சிலர் பொருட்களுடன் பிடிபட்டனர்.

அச்சுவேலி அரசடி வீதி வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகிகள் மேற்கொண்ட முயற்சியினால் திருடர்கள் பிடிபட்டனர்.

நீர் இறைக்கும் இயந்திரம் அச்சுவேலி தெற்கில் உள்ள சி. சிவம் என்பவரின் முந்திரிகைத் தோட்டத்திலிருந்து களவெடுக்கப்பட்டு பூநகரியில் ஒருவருக்கு விற்கப்பட்டதாம்.

இரு ஏசியா சைக்கிள்களும் ஒரு றலி சைக்கிளும் யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய இடங்களில் திருடப்பட்டவை.

வீடியோ நாடாக்கள் அச்சுவேலியிலுள்ள வீடியோ வாடகை நிலையம் ஒன்றில் கையாடப்பட்டவையாம்.

சைக்கிள்களை சொந்தக்காரர் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-11)

### மாங்குளத்தில்

## வீட்டு நன்கொடை நிறுத்தம்

மாங்குளம், பெப் 18

மாங்குளம் கிராமசேவை அலுவலக பிரிவில் 57 பேருக்கு வழங்கப்படவிருந்த வீடமைப்பு நன்கொடையான ரூபா பதினையாயிரம் நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பிரிவில் கடந்த கால சம்பவங்களின் போது இடம் பெயர்ந்து மீண்டும் குடியமர்ந்தவர்கள் பலருக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை. (இ-94)

## அதிகரித்த கட்டணத்தில் தராசுகளுக்கு முத்திரை

யாழ்ப்பாணம், பெப். 18

தராசுகளுக்கு முத்திரை இடுவதற்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இதற்கான அறிவிப்பு அரசால் விடுவிக்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் தற்பொழுது தான் இது அமுலுக்கு வருகிறது.

இந்தக் கட்டண அதிகரிப்பின் படி ஐந்து கிராமில் இருந்து ஒரு கிலோ வரையுள்ள படிகளுக்கு ஒரு ரூபாவும், 2 கிலோவில் இருந்து 5 கிலோ வரை உள்ள படிகளுக்கு இரண்டு ரூபாவும் அறவிடப்படுகிறது.

தூக்குத் தராசுகளுக்கு மூன்று ரூபாவும் 100 கிலோ நிறுவையுள்ள வட்டத் தராசுகளுக்கு 20ரூபாவும்- மேடைத் தராசுக்கு 40 ரூபாவும் அறவிடப்படுகின்றன.

தராசுகளுக்கு முத்திரை பதிக்கும் வேலை ஆரம்பமானதில் இருந்து நேற்றுவரை சுமார் 25 வர்த்தகர்கள் தமது தராசுகளுக்கும், படிகளுக்கும் முத்திரை பதித்துள்ளனர்.

### 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில்:

## 8 மாணவர்கள் ஜப்பானில் 2 வார கால சுற்றுப்பயணம்

கொழும்பு, பெப். 18

ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாக சித்தி எய்திய எட்டு மாணவர்கள் ஜப்பானில் இரண்டு வார கால சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்வர்.

மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்படும் எட்டு மாணவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படும். எதிர்வரும் ஏப்ரலில் இப்பயணம் ஏற்பாடாகியுள்ளது. கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கைப் பிரிவு இதனை ஒழுங்கு செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் 125 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஜப்பான் செல்வர் அவர்களுடன் இலங்கை மாணவர்களும் சேர்ந்து கொள்வர் (உ-எ)

### அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் பெப் 18

பனை அபிவிருத்திச் சபையின் கீழ் தீவுப்பகுதியில் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர் திரு. சி. பாலசிங்கம் இந்த நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ஒ-3)

## பாடசாலையில் திருட்டு

குருநகர், பெப். 18

யாழ், பெரிய புலம் மகா வித்தியாலயத்தில் மோட்டர் திருட்டுப் போயுள்ளது.

கடந்த காலங்களிலும் வித்தியாலயத்தில் வயலின், உண்டியல் பணம், ஆரம்ப கல்வி உபகரணங்கள் [illegible] டப்பட்டன என்று 'உதயன்' செய்தியாளரி[illegible] தெரிவித்தார். (இ-51)

## கால் நடை தொல்லை

சேமமடு, பெப் 18

வவுனியா ஆதார வைத்தியசாலை வளவினுள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை பெருமளவில் தலை தூக்கியுள்ளது. இரவில் ஆஸ்பத்திரி வளவில் நூற்றுக்கணக்கான மாடுகள் படுத்து உறங்கி அதை அசுத்தப்படுத்துகின்றன. (க-37)

### யாழ் அரச செயலகத்துக்கு

## சுற்று நிருபங்கள் வந்து சேருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், பெப் 18

யாழ். அரசாங்க செயலகத்துக்கு பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபங்கள் ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று கூறப்படுகிறது.

அரசாங்க ஊழியர்கள். போட்டிப் பரீட்சைகள் சம்பந்தமாக பொது நிர்வாக அமைச்சிடம் இருந்து வரும் சுற்று நிருபங்கள் தாமதமாக வருவதாகவும் [illegible] கடந்த வருடம் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களில் 27 சுற்று நிருபங்கள் யாழ் செயலகத்துக்கு இன்னும் வந்து சேரவில்லை.

இந்த சுற்று நிருபங்களை அனுப்பும்படி யாழ் அரசாங்க செயலக அதிகாரிகள் பொது நிர்வாக அமைச்சைக் கோரியுள்ளனர்.

சுற்று நிருபங்கள் தாமதம் அடைவதால் ஏராளமான தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## உதவி ஆணையாளர் பணிமனை

யாழ்ப்பாணம், பெப். 18

உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் என வழங்கப்பட்ட அலுவலகங்கள் உதவி ஆணையாளர் பணிமனை என்று அழைக்கப்பட இருக்கின்றன.

இவற்றுக்கான பெயர்ப் பலகைகள் யாழ் அரசாங்க செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. முன்பு 'பிரிவு' என அழைக்கப்பட்டது இனி 'கோட்டம்' என அழைக்கப்படும். (ஒ-3)

## அபிவிருத்தி வேலை பற்றி ஆராய கூட்டம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து இவ்வருடம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றி ஆராய விசேஷ கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

திணைக்களப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் இவ்வாண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய செயல் திட்டங்கள் குறித்து திணைக்களத் தலைவர்களிடம் விவரங்கள் கோரப்படவிருக்கின்றன. (இ-3)

## கமநல சேவை நிலையத்துக்கு புதியகட்டடம்

முல்லைத்தீவு, பெப் 18

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொக்கிளாய் கொக்குத் தொடுவாய் கருநாட்டுக்கேணி மக்கள் வெளியேறிய தன் பின் தரைமட்டமாக்கப்பட்ட கொக்கு தொடுவாய் கமநலசேவை நிலையதுக்கு புதிய கட்டடம் அமைக்கப்படும்.

அண்மையில் அங்குசென்ற முல்லை மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. செ, பஞ்சலிங்கம்ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியான ரூபா 4 லட்சம் செலவில் புதிய கமநலசேவை நிலையத்தை கட்ட நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-97)

# வாசகர் திருமுகம்

## நாவலர் வீதி திருத்தப்படுமா?

யாழ்ப்பாண நாவலர் வீதி மானிப்பாய் வீதியில் ஆரம்பமாகி மாம்பழச் சந்தி வரை (அதாவது அரியாலைப்பகுதி வரை) செல்கிறது. ஆனால் இவ்வீதி தொடக்கத்தில் இருந்து முடிவுவரை குன்றும் குழியுமாக சில இடங்களில் தார் இட்ட இடம் தெரியாமலும் மழைகாலங்களில் சிறு குளங்களாகவும் காட்சியளிக்கின்றது. இதனால் பாதசாரிகளும், வாகன ஓட்டிகளுக்கும் அத்துடன் வாகனத்திற்கும் பெரிய இழப்பாக உள்ளது.

இது கடந்த பல வருடங்களாக செப்பனிடாததால் ஏற்பட்டதேயாகும். யாழ். நகரில் அநேக வீதிகள் செப்பனிடப்பட்டு புதுப் பொலிவு பெறும் வேளையில் இவ்வீதிக்கு யார் சொந்தக்காரர் என்ற நிலையிலா இப்பரிதாப நிலை? மாநகர எல்லைக்குள் இருந்தும் வீதி அதிகார அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமானதா என்றதால் இக்கவனயீனம்?

இதுசம்பந்தப்பட்ட மாநகரசபையாவது, வீதி அதிகார அபிவிருத்தி சபையாவது இந்த வீதியை உடனடியாகச் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

க. க. இராஜேந்திரன்
யாழ்ப்பாணம்.

## வைத்திய வசதிகள் இல்லை

கரணவாய் மக்களுக்கு அரசாங்க வைத்திய வசதிகள் இல்லை. ஆனால் முக்கியமாக மண்டான், கல்லுவம், சோழங்கள், அண்ணாசிலையடி மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். நோய் வாய்ப்பட்டால் சில மைல்களுக்கு அப்பால் உள்ள மந்திகை வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியிருக்கிறது. முக்கியமாக ஏழை மக்களே கஷ்டப்படுகிறார்கள்.

கரணவாயில் அரசினர் வைத்தியசாலை அமைக்கும் வரை ஒரு கிளை வைத்தியசாலை அமைத்து குறைந்தது கிழமைக்கு மூன்று நாட்களாவது அரசாங்க மருந்துகள் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்பாடு செய்வார்களா?

முன்னர் கிழமைக்கு ஒரு நாள் வைத்தியசேவை எமக்கு வழங்கப்பட்டு வந்தது. அது இப்போது நடைபெறுவதில்லை.

க. புவனேஸ்வரி
கரணவாய் தெற்கு.
கரவெட்டி.

## முல்லைத்தீவில் துர்நாற்றம்

எமது முல்லைத்தீவுப் பட்டினத்தில் உள்ள வீதி ஓரங்கள், பொதுச் சந்தையின் பின்பக்கம், அஞ்சல் அலுவலகத்துக்கு அண்மிய இடங்கள் போன்ற பகுதிகளில் குப்பைகள் அகற்றப்படாமல் நிறைந்து கிடப்பதால் துர்நாற்றம் வீசுகிறது.

சில வருடங்களுக்கு முன் எமது பட்டினத்தில் குப்பை கூளங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரம் ஒன்று பாவிக்கப்பட்டது. அந்த இயந்திரம் பழுதடைந்து திருத்துவதற்காக விடப்பட்டு இருந்தபோது மாயமாய் மறைந்து விட்டது.

பின்னர் எமது பட்டின சபை வாடகைக்கு இயந்திரத்தைப் பெற்று குப்பை கூளங்களை அகற்றி வந்தது. அவ்வேலையும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு இப்போ எவ்வித செயல்பாடும் இல்லாமல் குப்பை கூளங்கள் அகற்றப்படாமல் வீதி ஓரங்களில் நிறைந்து கிடக்கின்றன. இதனால் பல தொற்று நோய்கள் ஏற்படும் அபாய நிலையில் எமது பட்டினம் உள்ளது.

இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் அக்கறை கொள்வாரா?

இ. யோசப்
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DIPLOMA IN PHARMACY**

பாமஸி பயிற்சியில் டிப்ளோமா

அரசாங்க பாமஸி பரீட்சையில் தேற இலகுவான பரீட்சை நெறி

உள்நாட்டு வேலை வாய்ப்புக்குகந்ததாக செய்முறைப் பயிற்சியுடன் கூடியது

ஆரம்பம்: 24 - Feb : 1990

உங்கள் பதிவுகளுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane
Hospital Road,
JAFFNA.

[C-3817]



## உடனடி வேலைவாய்ப்பு

★ சவூதி அரேபியா

பின்வரும் வெற்றிடங்களுக்கு, சவூதிஅரேபியாவில் பிரபல்யமான கொம்பனி ஒன்றிற்கு இம்மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வெளிநாட்டவரால் நேர் முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. விரும்புவோர் உடன் கடவுச்சீட்டு, 3 படங்கள், சான்றிதழ்கள் என்பனவற்றுடன் நேரில் வரவும்.

| | | | |
|---|---|---|---|
| தொழிலாளர் (Labourers) | — | 520 | SR |
| பிளம்பர் (Plumber) | — | 670 | SR |
| பிளாஸ்ரெறர் (Plasterer) | — | 670 | SR |
| ஸ்ரீல் பிக்சர் (Steel Fixer) | — | 670 | SR |
| மேசன் (Mason) | — | 670 | SR |
| மெக்கானிக் (Mechanic) | — | 720 | SR |
| மெக்கானிக் டீசல் (MechanicDiesel) | — | 770 | SR |
| பெயின்ரர் (Painter) | — | 670 | SR |
| சாரதிகள் (Driver) H.V | — | 750 | SR |
| ரெயிலர் டிரைவர் | — | 850 | SR |

கிறேன்ஒப்பறேற்றர் (Crane Operator) —
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)
Computer Operator ,, ,, ,,

வயது 22க்கு மேல்

**V.N. SIVAGNANAM**
449, RAMALINGAM ROAD,
NALLUR, JAFFNA.

(11811)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி. ஜமுனாளினி (நிலா) பரமானந்தம்**

வண்ணமுகம் ஒளி வீச
வட்டமிட்ட முழு நிலாவே!
எண்ணமெல்லாம் நிறைந்திருந்து
ஏற்றம் தரு நிலாவே
கண்ணிமைக்கும் நேரமெல்லாம்
கன்னமிடும் உன் நினைவே!
காலன் கைபட்டு எமைவிட்டு
எங்குற்றாய் எழில் நிலாவே!
மூவிரண்டு ஆண்டுகள் மறைந்தாலும்
ஓயவில்லை உன் நினைவு!

நிலாவே

உன் ஆத்மா பிரசாந்தி பெற பிரார்த்திக்கும்:
அன்பு அம்மா, அக்கா, அத்தான் யோகி,
ஐம்பா, அண்ணா, கண்ணன், றோசான்,
ராகு, கார்த்திகன்.

''மிதிலை''
கெருடாவில்,
தொண்டமானாறு.

(11805)

கிழக்கில்

# தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரங்கள் நிகழ இடமளியோம்

## நிந்தவூரில் வி. பு. ம. முன்னணியின் பிரதித்தலைவர்

அம்பாறை, பெப். 18

'கிழக்கிலங்கையில் அமைதிச் சூழ்நிலையைச் சீர்குலைக்க எந்தச் சக்தி முனைந்தாலும் அதற்கு எதிராகத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கிழக்கில் நாம் நிலைகொண்டிருக்கும்வரை தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரங்கள் நிகழ இடமளிக்கமாட்டோம்'.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளருமான திரு. எஸ். கரிகாலன் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கருத்தரங்கு ஒன்று, நிந்தாவூர் அல்-அஷ்றக் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புலிகள் உறுப்பினர் திரு. இரா. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பெருந்தொகையான முஸ்லிம்மக்கள் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகி கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

பிரதித் தலைவர் திரு. கரிகாலன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

முஸ்லிம் மக்களை எமது விடுதலைப் போராட்டத்தில் அந்நியப்படுத்தாமல் இன்று அதிக முஸ்லிம் இளைஞர்களை எம்முடன் இணைத்துக்கொண்டுள்ளோம்.

எமது தியாகங்கள் மதிக்கப்படவும், எமது இலட்சியக் கனவுகள் நிறைவேறவும் முஸ்லிம்மக்கள் ஆதரவு நல்க வேண்டும்.

நாம் சக்தி படைத்த இராணுவமாகத் திகழ்ந்து அதன் மூலம் இன்று சுமுகமான அமைதிநிலையைத் தோற்றுவித்துள்ளோம்.

வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம்களாகிய நம் இரு சமூகத்தவர்களும் நிரந்தரமாக ஒன்றுபட்டே வாழ வேண்டும்.

கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையைச் சீர்குலைக்க எந்தசக்தி முனைந்தாலும் அதனை நாம் முறியடிப்போம்.

முஸ்லிம் மக்களுக்கு எம் மீது சிறிதும் சந்தேகம் வரத் தேவையில்லை. முஸ்லிம்கள், தமிழர்கள் என்ற பேதம் பாராது நாங்கள் சேவையாற்றுவோம். இதைக்காலப் போக்கில் உணர்ந்துகொள்வீர்கள்.

முஸ்லிம் மக்களின் சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டுமென்ற நம்பிக்கை கொண்டுள்ளோம். அதைச் செயற்படுத்துவோம்''. இவ்வாறு அவர் கூறினார்-

### பலத்தை நிரூபிப்போம்

அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கஷ்ட்றோ உரையாற்றுகையில்;

வேட்டுக்களால் மட்டுமல்ல ''வோட்டு''க்களாலும் (வாக்குகளாலும்) எமது பலத்தை நிரூபிக்கமுடியும் என்ற நிலைக்கு நாம் வந்துள்ளோம்.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே பதற்ற நிலையை ஏற்படுத்தி எம்மை முஸ்லிம்களிடமிருந்து அந்நியப்படுத்துவதற்குச் சில திட்டமிட்ட சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ், முஸ்லிம் மக்கள் இத்தகைய தீயசக்திகளின் செயல்கள் குறித்து மிகவிழிப்புடன் செயலாற்ற வேண்டும். என்றார்.

செயலாளர் நாயகம் திரு. யோகி, மட்டக்களப்பு, அம்பாறைப் பிராந்திய இராணுவத்தளபதி திரு. கருணா ஆகியோரும் உரையாற்றினர்.

[அ-14]

இலங்கை வங்கியின்

# விசா கார்ட் திட்டம் கிராமப் பகுதிக்கும் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

இலங்கை வங்கியின் விசா கார்ட் (சி-பாங்) திட்டம் யாழ்- மாவட்டத்தின் கிராமப் பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

சாவகச்சேரியில் 14 ஆம் திகதியும், நெல்லியடியில் 15 ஆம் திகதியும், மானிப்பாயில் 16ஆம் திகதியும் இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இத் திட்டத்தில் சாவகச்சேரியில் கீதா நகை மாளிகை, பிள்ளையார் அன்ட் கம்பெனி, சிவாரேடிங் கம்பெனி, ஸ்ரீ விக்னேஸ்வரன் ஸ்ரோர்ஸ் ஆகியனவும் நெல்லியடியில் சிற்றம்பலம்ஸ்ரோர்ஸ், திஸ்ஸ ஸ்ரோர்ஸ் ஆகியனவும் மானிப்பாயில் சுந்தர் ஸன் நிறுவனமும் இத்திட்டத்தில் இணைந்துள்ளன.

பணத்தை எடுத்துச் செல்லாமலேயே மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யவும் அத்தியாவசிய சேவைகளை எளிதில் பெற்றுக் கொள்ளவும் இத்திட்டம் வழிவகுக்கின்றது என்பது தெரிந்ததே.

இத்திட்டம் ஏற்கனவே யாழ்ப்பாண நகரில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 18

நெடுந்தீவின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை நடைபெறும். நெடுந்தீவுப் பிரதேச சபை விசேட ஆணையாளர் ஏ. சி. இராஜதுரை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (க)

## சென்றல் சென்ஜோன்ஸ் கிரிக்கெட்

யாழ்ப்பாணம், பெ 18

பல ஆண்டு காலமாக நடைபெறாத சென்றல்-சென்ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியை இவ்வாண்டு நடத்த மும்முரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிய வருகின்றது.

1984 ஆம் ஆண்டு முதல் இப் போட்டி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கிரிக்கெட் போட்டி

யாழ், மத்திய கல்லூரி கிரிக்கெட் அணியினர் இவ்வாண்டின் முதலாவது கிரிக்கெட் போட்டியை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கின்றனர். (க)

## இமையாணன் அ. த. க விளை.போட்டி

இமையாணன் அ. த. க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர்ப் போட்டி 21ஆம் திகதி அதிபர் திரு. ம. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகக் கல்வியதிகாரி திரு. கே. சண்முகநாதன் பிரதம அதிதியாகவும், உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. கே. சிதம்பரப்பிள்ளை, வடமாநிலக் கல்வித் திணைக்கள உடற்பயிற்சிக் கல்வியதிகாரி திரு. ரி. அருணகிரிராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுகின்றனர். (சு)

## வைத்தீஸ்வரா விளையாட்டுப் போட்டி

யாழ். வைத்தீஸ்வராவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி 21 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இவ் வித்தியாலயத்தில் உப அதிபராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற திரு. எஸ். இராஜதுரையும் திருமதி. இராஜதுரையும் கலந்து கொள்கின்றார்கள்.

# அமெரிக்கா, ஓமானில் தாதிகளுக்கு வேலைவாய்ப்பு

## சுகாதார அமைச்சு விண்ணப்பம் கோரல்

கொழும்பு பெப். 18

அமெரிக்கா, ஓமான் ஆகிய இடங்களில் பணிபுரிய விரும்பும் தாதிகளிடம் இருந்து விண்ணப்பங்களை சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

பின்வரும் தகைமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

**தகைமைகள்**

★ ஜனவரி முதலாம் திகதி அன்று 45 வயதுக்குக் கீழ்பட்டவர்களாக அரசு துறையில் நிரந்தரமாக பணிபுரியும் தாதிகளாக இருக்க வேண்டும்.

★ ஜி. சி. ஈ சாதரண பத்திரப் பரீட்சை அல்லது என். சி. ஜி. ஈ. பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

★ பொதுத் தாதித்துறையில் ஆகக் குறைந்தது 3 ஆண்டு கால அனுபவம் பிரசவ வைத்தியத் துறையில் குறைந்தது 3வருட அனுபவம் அடிப்படைத் தகுதிகளாகப் பெற்றிருக்க வேண்டும்.

★ இரண்டு ஆண்டு காலத்துக்கு இந்த நாடுகளில் தெரிவு செய்யப்படுபவர்கள் பணிபுரியலாம்.

இதே வேளை

அமெரிக்க ஆஸ்பத்திரிகளில் இலங்கைத் தாதிகளை நியமிக்கும் திட்டம் குறித்து அமெரிக்க அரசிடமிருந்து தங்களுக்கு எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை என்று கொழும்பில் அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு அனுப்ப இலங்கை சுகாதார அமைச்சு தாதிகளை தெரிவு செய்தாலும், தெரிவு செய்யப்படும் தாதிகள் பரீட்சை ஒன்றை எடுத்து சித்தி எய்திய பின்னரே வேலை செய்ய அனுமதிக்கப்படுவர். அப் பரீட்சை ... அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் சொன்னார். (ஒ-எ)

## பல்கலைக்கழக இணைப்புச் சேவை

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பல்கலைக்கழக தாவரவியற் துறையுடன் சேர்ந்து லண்டனில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்கள் இணைப்புச் சேவையை மேற்கொள்ள இருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை பிரிட்டிஷ் கவுன்சில் செய்து வருகிறது.

லண்டன் 'வைற் கொலிஜ்' 'இம்பீரியல்' ஆகியவையே அந்த இரு பல்கலைக்கழகங்கள் ஆகும்.

இந்த இணைப்புச் சேவை மூலம் இரு பல்கலைக் கழகங்களுடனும் இணைந்து யாழ். பல்கலைக்கழக தாவரவியல் பிரிவு பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும். (ஒ-3)


# றெறாசோ ஷிப்ஸ் (TERRAZZO CHIPS)

- ★ வெள்ளை சிமெந்து
- ★ பட்லோ தண்ணீர் உட்புகாத சிமெந்து
- ★ கலர் பவுடர் (Holland, Germany)
- ★ பித்தளை-அலுமினியம் பட்டி
- ★ யூனியன் மோட்டிஸ் ஒற்றை - இரட்டை -அசையும் கதவுகளுக்கான பூட்டுக்கள் (இங்லிஷ்) (Union Mortice Lock)

ரூபா 16/- மேல்

★ **ராம்சன்ஸ்** ★

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.

தொலைபேசி: 434411 — 431511



# WANTED

**ACCOUNTS CLERK** (Female)

**Requirements:**
Passed G. C. E. O/L with credit in English, Maths.
Passed Accounts in A/L Exam

**Age:** Below 25 years

**CUSTOMER SERVICE** (Female)

**Requirements:**
Passed G. C. E. O/L with knowledge of typing in English.

**Age:** Below 35 years

**COURIER** (Male)

**Requirements:**
Passed G. C. E. O/L with credit in English

**Age:** 30 years

PLEASE SEND YOUR APPLICATIONS IN YOUR OWN HANDWRITING.

Closing date: 26th Feb 1 90.

Manager,
**DHL INTERNATIONAL,**
C/o COSMOS MARKETING SERVICE,
337, Kasturiar Road,
Jaffna.

(C/3869)



வடமாகாணத்தில் அரசாங்க உல்லாச பயண சபையால் (Govt. Tourist Board) அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு ஸ்தாபனம்

தமிழ்நாடு, கேரள, கர்நாடக ஆந்திர மாநிலங்களில்

**162வது சமய, சரித்திர, கலாசார சுற்றுலா**

சித்திரை 1990 - ருரிஸ்ட் பஸ்மூலம்

இடங்கள்

திருச்சி, மலைக்கோட்டைப் பிள்ளையார், ஸ்ரீரங்கம், திருவானைக்கால், சமயபுரம், கன்யாகுமரி, அரபிக்கடல், - இந்துசமுத்திரம் - வங்காள விரிகுடா ஒன்றுசேரும் திரிவேணி சங்கமம், நடுக்கடலில் விவேகானந்தர் மண்டபம், குமரி அம்மன், கருங்கல் தூண்களில் ச - ரி - க - ம - ப - த - நி - ஸ நாதங்கள், மிருதங்க ஒலி, ஜலதரங்க ஒலிகள் கேட்கும் சுசீந்திரம், குற்றாலம் நீர்வீழ்ச்சி, மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திம்பம்மலை, மைசூர், மகாராஜா அரண்மனை, சாமுண்டீஸ்வரி அம்மன், நந்தி பிருந்தாவனம், பங்களூர், திருப்பதி, திருக்கழுக்குன்றம், மகாலிபுரம், வி. ஜி. பி. தங்கக் கடற்கரை, கபாலீஸ்வரர், அஷ்டலக்ஷ்மி, அண்ணா சமாதி, எம்.ஜி.ஆர். சமாதி, சிதம்பரம், சீர்காழி, நந்தனாருக்கு நந்தி விலகிய திருப்புன்கூர் முருகப்பெருமான் ஆறுபடை வீடுகள், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச் சோலை, பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, மற்றும் பல.

★ **ராஜா ரூர்ஸ்** ★

168/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்னிய செலாவணி (Foreign Exchange) ஏற்கும் ஸ்தாபனம்.

(ஸ்தாபிதம் - 1961) 28 வருட அனுபவஸ்தர்களின் ஒழுங்குகள் - 10, 000 பெண்கள் 7000 ஆண்கள் பங்குபற்றி உள்ளனர் - குறைந்த செலவில்

வி. அமிர்தேஸ்வரராஜா
அதிபர், சமாதான நீதவான்.

(சி/ 3855)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உடனடி வேலை வாய்ப்புகள்

Labour Licence No. 585
Approval No 585/1-2-3-4/90

★ சவூதி அரேபியாவுக்கு:

பணிப் பெண்கள் — வயது 30—38
வீட்டுச்சாரதி — வயது 40 +

(முஸ்லீம் பெண்களுக்கு கடவைச்சீட்டு இனாம். மற்றவர்களுக்கு வங்கி மூலம் கடன் பெற்றுக் கொள்ளலாம். 4 நாட்களில் பயணம் செய்யலாம்)

★ Bahrain பஹாரின்

உடனடியாக ஓர் சிவில் பொறி இயலாளர் (Engineer) தேவை

Chemist Quality Controller for Soft-drink Factory with Ten years experience தேவை.

தையல் வேலைக்கு ஆண்கள் பெண்கள் தேவை.

★ சிங்கப்பூர் ★ அபுதாபி
★ குவைட் ★ பஹாரின்

பணிப்பெண்கள் தேவை
● வயதெல்லை 22 — 35

உடன் தொடர்பு கொள்ளவும்:

**நீம்ஸ் ஏஜன்சி**
32 A கோட்டன் பிளேஸ்,
கொழும்பு-7,

ஏ. கே. சிவஞானம்
171 A, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். [11816]



எமது நேற்றைய புதிய வெளியீடு

★ பாண்டியராஜன், ★ ரசிகா ★ S. S. சந்திரன்

★ சின்ன சின்ன ஆசைகள் ★

**குணம் வீடியோ சென்ரர்,**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (3875)



## பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது

பளைக்கும் இயக்கச்சிக்கும் இடையில் மணிபேஸ் ஒன்றும் குறிப்பிட்ட தொகைப் பணமும் கண்டெடுக்கப்பட்டது.

தொடர்பு:
**வாணி இன்ஸ்ரிரியூட்**
கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம். (2568)



# ஞானக்கதிர்
அன்பு - அறநெறி - ஆன்மீகம்

## வெளிவந்து விட்டது!

மாசி மாத

★ ஞானக்கதிர் ★

இப்போது விற்பனையாகிறது!!

- ★ சிவராத்திரி மகிமை.
- ★ மாசியும் மகமும்.
- ★ காயத்திரி பற்றி பாபா......
- ★ கலாநிதி சபா ஜெயராஜா எழுதும் சமயமும் கல்வியும் பற்றிய தொடர் கட்டுரை.
- ★ கடையிற் சுவாமி செய்த அற்புதங்கள்.
- ★ நோன்பு காக்கும் நலம். – நாலு பெண்கள் சொல்வது.
- ★ ரமண மகரிஷியின் ஆங்கிலக் கட்டுரை.
- ★ ஏழாலை, வசந்த நாகபூஷணி அம்பாள் கோவில் திருக்குட முழுக்குச் சிறப்பிதழ்.
- ★ அவதார புருஷர்களின் சிறப்பம்சங்கள் பற்றி பெ. கணநாதபிள்ளை ...............
- ★ கற்சிலைகள் பற்றி விஞ்ஞானக் கண்ணோட்டம் ...............
- ★ சிவராத்திரி தத்துவத்தை விளக்கும் அழகிய மூவர்ண முகப்புச் சித்திரம்.
- ★ மற்றும் பல ......

உதயன் விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள் [சி-3391]


## ருமேனியாவில் அரசு அலுவலகம் முற்றுகை

புக்காறெஸ்ற், பெப் 17

ருமேனியாவின் பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சர்களை பதவி விலகக் கோரி இராணுவ அதிகாரிகள் சிலர் அரசு தலைமையலுவலகத்தில் நடத்தும் முற்றுகை மூன்றாவது தினமாக நேற்றும் நீடித்தது.

கடந்த டிசம்பரில்கொல்லப்பட்ட ருமேனியா ஜனாதிபதி சீசெஸ்குவிற்கு ஆதரவாக அப்பாவி மக்களை இராணுவத்தினர் சுட்டுக்கொல்வதற்கு இந்த அமைச்சர்கள் பொறுப்பாக இருந்தனர் என்று இந்த அதிகாரிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர். (எ)

## ஜப்பானில் இன்று பொதுத் தேர்தல்

டோக்கியோ, பெப். 18

ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தல் இன்று (ஞாயிறு) நடைபெறுகின்றது.

இத்தேர்தலின்போது புதிய நாடாளுமன்றத்துக்கு 512 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 295 ஆசனங்கள் இருந்தன.

இம்முறையும் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியை ஆட்சிக்கு வரலாம் என்று கூறப்படுகின்றது. (எ)

## 41 ஆயிரம் வேட்பாளர் போட்டி

புதுடில்லி, பெப் 17

மகராஷ்டிரா, பீஹார், ஒரிஸ்ஸா, குஜராத் ராஜஸ்தான் அருணாசலப் பிரதேசம் மத்தியப்பிரதேசம், இமாசலப் பிரதேசம் பாண்டிச்சேரி ஆகிய 9 மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களில் 41 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

23 கோடி வாக்காளர்கள் இம் மாதம் 27 ஆம் திகதி வாக்களிப்பர் தேர்தல் முடிவுகள் இம் மாதம் 28 ஆம் திகதி மாலை தெரியவரும். (எ)


A/L விஞ்ஞான மாணவர்கட்கு

ஒலியியல்:- (விசேட பிரிவு) நாளை
Mon:- 3 00 - 4.00 P.m. 19-02-90

ஆசிரியர்
திரு. ரவீந்திரநாதன் (B.Sc.)
3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (C/3872)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**புவனேஸ்வரி வேலுப்பிள்ளை**

தோற்றம்: 11 – 05 – 1931 மறைவு: 19 – 01 – 1990

வாழ்ந்திட்டால் பலகாலம் வாழ்ந்திருப்பாய்-அம்மா
பாதகர்கள் பாதியிலே உமது உயிரை பறித்தனரோ
'ஆ' என்றும் கதறாமல் உயிரதுவும் பிரிந்ததுவோ-அம்மா
மீதி வழி முடிக்கும் முன் தூக்கத்தில் ஆழ்ந்திட்டீரோ
காலக்கெடுவின்றி காலனவன் வீசிய பாசக்கயிற்றாலே
பாலைவனமானதுவே எங்கள் வாழ்வு – அம்மா
நீர் மறைந்து மாதமொன்றானாலும் - அம்மா
உமது நினைவலைகள் எம்மை விட்டு அகலவில்லை.
'அம்மா' என்றழைக்க யாருமில்லை எங்களுக்கு
இனி இக்குறை தீர்க்க எவருமில்லை மாநிலத்தில்
அம்மா உமது பிரிவால் நாம்படும் வேதனையை
ஆண்டவனன்றி வேறு யாரறிவார்.

ஓம் சாந்தி...... ஓம் சாந்தி ......... ஓம் சாந்தி......

கணவன், பிள்ளைகள்.

71 (16) 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [சி-3873]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஸ்ரீமான் கதிரேசர் செல்லப்பா சதாசிவம்**
முன்னைநாள் சாவகச்சேரி நீதிமன்ற முதலியார்
(சக்கடத்தார்)

மலர்வு: 1912-07-19 உதிர்வு: 1989-02-18

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு நீங்கள் மட்டும் மீளாத்துயில் கொள்ளச் சென்றதெங்கே. கல்லறையில் உமை வைத்து கண்ணீரால் நனைத்திட்டோம். உலகில் வைக்க இயலாமல் உள்ளத்தில் வைத்து உருகுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சற்குணவாசா'
கேணியெடி,
மீசாலை. [2536]


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



# வெளிநாடுகளுக்கு பனம் தும்பு ஏற்றுமதி

உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து பனந்தும்பு ஏற்றுமதிக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளமையால் பனம் தும்பை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் பனை அபிவிருத்திச் சபை சகலருக்கும் உதவ முன் வந்துள்ளது.

எமது பிரதேசத்தின் தொழில் வளத்தைப் பிரயோசனப்படுத்தி பயன்பெற முன்வருமாறு கோருகின்றோம். விபரங்களுக்கு சபையின் பின்வரும் உத்தியோகத்தர்களின் காரியாலயங்களில் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| விரிவாக்கல் அதிகாரி | — பனை அபிவிருத்திச் சபை | — தலைமைக் காரியாலயம், இல: 47, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். |
| இணைப்பு உத்தியோகத்தர் | " | — பிராந்தியச் செயலகம், திட்டமிடல் பகுதி. கச்சேரி, மன்னார். |
| இணைப்பு உத்தியோகத்தர் | " | — பிரதேசக் காரியாலயம், மாங்குளம் வீதி, யோகபுரம். |
| அபிவிருத்தி உதவியாளர் | " | — கச்சேரி, முல்லைத்திவு. |
| உற்பத்தி உதவியாளர் | " | — பிராந்திய அலுவலகம், வவுனியா. |
| இணைப்பு உத்தியோகத்தர் | " | — கற்பகம், திருகோணமலை. |
| இணைப்பு உத்தியோகத்தர் | " | — பிராந்தியச் செயலகம், மாமாங்கம், மட்டக்களப்பு. |
| இணைப்பு உத்தியோகத்தர் | " | — கச்சேரி, புத்தளம். |
| திரு. எம். சிவபாலன், இணைப்பதிகாரி (பனம் பொருள்) | | — தெ. ப. பொ. வி. கூ. சங்கம், கிளிநொச்சி. |

தலைவர்

பனை அபிவிருத்திச் சபை,
இல. 244, காலி வீதி,
கொழும்பு - 4. [சி-3371]



# ANCHOR Bicycle




GUARANTEED

STOCKISTS:

VENKADESWARA STORES
97, KASTURIAR ROAD.
JAFFNA.

SRI PARTHASARATHY STORES
79, KASTURIAR ROAD.
JAFFNA.

High Standard of Quality
Perform Better, Last Longer.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

உதயன்

18 - 02 - 1990 ஞாயிற்றுக்கிழமை

பல் கட்டுபவரும்,
கண்ணாடி தருபவரும்!



கிளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

# யாழ். மாவட்டப் பாடசாலைகள் விரைவில் இரு நேரம் இயங்கும்

## மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் நேற்று யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள் விரைவில் இருநேரம் இயங்க இருக்கின்றன.

யாழ் மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து பேசுகையில் யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இதனைத் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு வே. பாலசுந்தரம் தலைமையில் நேற்று நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விரைவில் இரு நேரம் இயங்க இருக்கின்றன. பாட நேரங்களும் அதிகரிக்கப்பட இருக்கின்றன. அத்துடன் கல்வியுடன் மற்றைய துறைகளில் மாணவர்களை ஈடுபடுத்தவும் திட்டங்கள் செயற்படுத்தப்படவிருக்கின்றன.

இப்படி அவர் கூறினார்.

நேற்றுக் காலை கல்லூரியில் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடமும், ஆரம்ப பிரிவுக் கட்டடமும், ஆய்வு கூடக் கட்டடமும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன. (இ-3)

## யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப். 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான மூர்த்தி நேற்று யாழ். நகருக்கு வருகை தந்திருந்தார். (ஒ-5)

## ஜனநாயகப் பாதை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக அமைதியையும் பாதுகாப்பையும் இழந்துள்ள ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நல்ல முடிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கும் இந்தத் தருணத்தில் அதற்குக் குந்தகமாக எதனையும் செய்யாதீர்கள் என்று அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஜனநாயக பாதைக்கு வருவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

### மனநிறைவு தந்தது

ஆனால் அதற்கு இடையூறாக இருக்கும் சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்று அந்த இயக்கத்தின் பிரதிநிதிகள் குழு கேட்டிருக்கிறது.

இப்பேச்சுக்கள் மன நிறைவை அளித்தன.

இப்பேச்சை அடுத்து ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் பேசுவேன்.

மீண்டும் ஞாயிறு காலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச உள்ளேன்.

இப்பேச்சுக்களுக்குப் பிறகு பிரதமர் வி. பி. சிங்குக்குப் பேச்சு விவரங்கள் சமர்ப்பிக்கப்படும்.

இப்பேச்சுக்களில் கலந்து கொண்டு வரும் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் நாளை (ஞாயிறு) அல்லது நாளை மறுநாள் (திங்கள்) புதுடில்லி சென்றதும், அங்கு பிரதமர் வி. பி. சிங்கைச் சந்தித்து பேச்சு விவரங்களைத் தெரிவிப்பார்.

தமிழீழப் போராளிகள் ஜனநாயகப் பாதையில் வருவதற்கு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியது அவசியம் — என்றார். (உ-எ)

# புலிகளின் மகளிர் பிரிவு பாரிஸில் கலை நிகழ்ச்சி

## கிட்டுவின் வாழ்த்தும் வாசிப்பு

பாரிஸ், பெப். 17

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் கடந்த மாத இறுதியில் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரால் ''சுதந்திரக் கீற்று'' என்னும் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மகளிர் பிரிவின் பிரெஞ்சுக் கிளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

மறைந்த விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுத் தலைவி மேஜர் சோதிஜாவினதும், அமைதி வேண்டி உண்ணா நோன்பிருந்து தன்னைத் தியாகம் செய்து கொண்ட அன்னை பூபதிக்கும் உருவப் படங்கள் வைக்கப்பட்டு தமிழீழ மலர்வுக்காக மறைந்த அனைவருக்கும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்ச்சி ஆரம்பமானது.

தமிழீழ மக்களின் சமகால போராட்ட வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சியில் ''கூர்டிஸ்தான்'' விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தோழர்களும், தோழிகளும் கலந்து கொண்டு தமது பாரம்பரிய இசை நாட்டியத்தை பாடி ஆடினர். கூர்டிஸ்தான் விடுதலை இயக்கத்தின் சார்பில் தமிழீழ மக்களின் விடுதலையை வாழ்த்தியும், விடுதலைப் புலிகளுடன் தாம் தோழமை கொள்வதை வலியுறுத்தியும் செய்தி வாசிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலக பொதுச் செயலாளரான திரு. கிட்டு லண்டனில் இருந்து அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது. (ஒ)

# கிளிநொச்சியில் 24ஆம் திகதி நிவாரணக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், பெப். 18

கிளிநொச்சியில் எதிர்வரும் 24ஆம் திகதி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கின்றன.

கடும் பாதிப்புக்குள்ளானோர் நிவாரணம், உற்பத்தி முயற்சிக்கான நிவாரணம், இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் ஆகியனவே வழங்கப்படவிருக்கின்றன.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கென 50 இலட்சம் ரூபா இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரியவந்தது. (ஒ-3)

கொம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
& DATA PROCESSING
4 MONTHS

வார இறுதி வகுப்புகள்

ஆரம்பம்: 25. 02. 1990

கட்டணம் மாதம் 300/- மட்டுமே

★ Lectures By Members of Data Processing Management (London)
★ Practicals on I B M Compatibles
★ Valuable Certificate on Completion of Course
★ தமிழிலும் விளக்கங்கள்

C. I. M. A, I. A. B. [Book keepers] Shorthand & Typing, d Base III+, Lotus 1,2,3, Word - Processing நடைபெறுகின்றன.

School of Business Administration
(Leaders in Computer Education)
16, 3rd, Cross Street,
(O. L. R தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
(சி/3882)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 2 - 1990 இல் வெளியிடப்பட்டுள்ளது.

## ஏனைய தமிழ்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளையே கலைஞர் கருணாநிதி சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து அல்லது திருகோணமலையிலிருந்து சென்னை வருவார்கள் என்று இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தமிழ்க்குழுக்களுடன் நேற்றிரவு பேச்சுக்கள் நடத்திய பின்னர் மீண்டும் இன்று காலை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் கலைஞர் தொடர்ந்து பேசுவார். என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## 25 ஆயிரம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயனுள்ள நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாத நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இருப்பதாகவும் பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

# அதிக பிரயாணிகளை ஏற்றிய 'மினிபஸ்' தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றிவந்த தனியார் மினி பஸ் ஒன்று, விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் மினி பஸ் ஒன்று மிதிபலகையிலும் கூரைக்கு மேலாகவும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிவந்தது. அதனை அடுத்து பிரஸ்தாப பஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

## ஆயுதங்களை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது.

தங்களைப்போல் விடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்திருந்தால் நாமும் அவர்களுடன் சேர்ந்து போராடியிருக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எண்ணினர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை அதிகாரங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கவே நாம் ஆயுதங்களைத் தூக்கினோம்.

இப்போது அந்தப் பயமுறுத்தல் இல்லை. தமிழரைப் பாதுகாக்கும் பொறுப்பை விடுதலைப் புலிகள் ஏற்றுள்ளனர். இனி நாம் ஆயுதம் வைத்திருக்க வேண்டியதில்லை. என்றார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவரெத்தினம் காந்திமதி

காரைநகர் பளைய கண்டியைச் சேர்ந்த திருமதி நவரெத்தினம் காந்திமதி 17-02-1990 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஓவசியர் நவரெத்தினத்தின் அன்பு மனைவியும், செல்வநாயகி, விஜயரெட்ணம், புஷ்பநாயகி, பத்மநாயகி, கணேஷரட்ணம், பூங்கோதை நாயகி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. மார்க்கண்டு

பெரிய மணல்,
காரைநகர்.
(1995)

## திருமதி சி. திருப்பதியார்
[கோப்பாய்]

திருமதி சின்னத்துரை திருப்பதியார் அவர்கள் சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற சி. பாஸ்கரன் (உதவி அரச அதிபர் பாண்டியன்குளம் முல்லைத்தீவு) சி. குமாரசாமி (இலங்கை வங்கி சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி பா. சிவபூரணம், திருமதி இராஜராஜேஸ்வரி, திரு. மகேசன் ஆகியோரின் மாமியாரும், நடனசபேசன், வாணதி, சிவாஜினி, மனோதரன், ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் சனிக்கிழமை (17 - 02 - 1990) சுன்னாகத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. குமாரசாமி

''உமா அகம்''
சுன்னாகம்.
[சி-3874]

## திரு. ஆறுமுகம் மார்க்கண்டு

முன்னைநாள் சரவணை கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவரும், குத்தகைகாரரும் கொட்டடி வாசியுமான திரு. ஆ. மார்க்கண்டு காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற அன்னபூரணத்தின் (இளைப்பாறிய தொலைபேசி இயக்குனர்) அன்புக் கணவரும் வனஜா (தொலைத்தொடர்புகள் திணைக்களம் யாழ்ப்பாணம்), சிவகுமார் (யுனைற்டெட் மேர்ச்சன்ற் லிமிட்டட் கொழும்பு), பிறேமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதமலரின் (லைடன் தொழிற்சாலை) சிறிய தகப்பனாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19- 02- 90 திங்கட்கிழமை மு. ப. 10 மணிக்கு நடைபெற்று தகனம் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
எம். சிவகுமார்.

21, சிவன் பண்ணை றோட்,
கொட்டடி,

## பொன்னம்பலம் நாகேஸ்வரி
[வடலியடைப்பு]

திருமதி பொன்னம்பலம் நாகேஸ்வரி 17-02-1990 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், திருமதி கமலாதேவி (U.K), திருமதி கேதீஸ்வரதேவி, திரு. கேதீஸ்வரன் (U.K), திரு. பாக்கியநாதன் (தொலைத் தொடர்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. சிவராஜா (பதிவாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), திரு. குகதாஸ் (மாலைதீவு), திருமதி சின்னத்தங்கம் (சித்திர மொழி), திருமதி சாந்தாதேவி (ஆசிரியை, றோ. க. வித்தியாலயம், நாரந்தனை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-02-1990 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் வடலியடைப்பில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் பொன்னப்பா சண்முகநாதன்

வேலணை மேற்கைச் சேர்ந்த ஆ. பொ. சண்முகநாதன் (முன்னாள் வேலணை கிராமசபை அங்கத்தவர்) அவர்கள் அகால மரணமானார். அன்னார் காலம் சென்ற பொன்னப்பா தம்பதிகளின் மூத்தமகனும், ஞானப்பூங்கோதையின் அன்புக்கணவரும், ஞானவசந்தி, ஸ்ரீகுகவதனி, தசவரதன், தசக்கிரீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரராஜசிங்கம், குலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதிகளின் மருமகனும், காலம் சென்ற மாணிக்கவாசகர், சிவயோகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 18- 02- 90 ஞாயிற்றுக்கிழமை பி. பகல் 3. 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வேலணை மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. சண்முகநாதன்.

வேலணை மேற்கு, வேலணை.
(1997)

## கார்த்திகேசு பொன்னுப்பிள்ளை

சித்திர மேழி இளவாலையைச் சேர்ந்த கார்த்திகேசு பொன்னுப்பிள்ளை காலமானார். அன்னார் காலம்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், சரஸ்வதி, திருநாவுக்கரசு (பண். பல. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்), காலம் சென்ற அன்னரத்தினம், சுந்தரலிங்கம் (சிலோன் காமன்ஸ் லிமிடட் பொது முகாமையாளர் பிரியர் லையின் குறூப்), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளம்பலம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்), செல்லையா, அருமைநாயகம், மகேஸ்வரி, யோகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், கணேசமூர்த்தி (தொலைத்தொடர்பு பரிசோதகர் கொழும்பு), உதயவதனி, கணேசராசா (பொறியியலாளர் கொழும்பு), கிருபாமலர், சிவராசா ஆசிரியர்), கிருபானந்தராசா, இரவீந்திரகுமார், மலேசியா), இரஞ்சிதகுமார், புஸ்பமாலா, ஜெயராசா, றாயிணி, தனேஷ்சன், துஷ்யந்தி, கேமலதா, இந்திரலதா, தேவகாஞ்சன், வசந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனோசனின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் சித்திரமேழி இரவி இல்லத்தில் 18- 02- 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பாதகர் காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கா. திருநாவுக்கரசு.

சித்திரமேழி,
இளவாலை
16 - 02 - 1990

## சண்முகம் சுந்தரலிங்கம்

(Senior M. L. T அரசினர் ஆஸ்பத்திரி பதுளை)

சண்முகம் சுந்தரலிங்கம் காலமானார். இவர் காலம் சென்ற சண்முகம், மனோன்மணி அவர்களின் அருமைப்புதல்வரும்; Dr. சேனாதிராஜா, சிவபாக்கியம், கனகலிங்கம், அமிர்தலிங்கம், கமலாம்பிகை, சற்குருநாதன், சிவயோககேஸ்வரி, பற்குணநாதன், பத்மாவதி, வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியவதி, சுவாமிநாதன், றஞ்சிதமலர், சறோஜினி, தவனேஷ் (விவசாய இலாகா), குணவதி, நித்தியானந்தன் (நீர்ப்பாசன இலாகா) சவுந்தரேஸ்வரி, ஜனகன், றஜிகலா ஆகியோரின் மைத்துனருமாவர். ஈமக்கிரியைகள் பதுளையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மனோன்மணி, சண்முகம்.

126, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.
(11815)

## தாமு. சரவணமுத்து

அளவெட்டி வடக்கு கூத்தன்சிமாவைச் சேர்ந்த தாமு. சரவணமுத்து 17-02-1990 சனிக்கிழமையன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், திரு. செல்லத்துரை (மக்கள் வங்கி, வவுனியா), திரு. கதிர்காமத்தம்பி (உரிமையாளர், மதுபானச்சாலை, பளை), திரு. சற்குணசிங்கம் (Holland), திருமதி பாலசுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சந்திரவதனா, திருமதி இந்திராணி (உரிமையாளர், அன்ரோ மதுபானச்சாலை, றக்கா வீதி, யாழ்ப்பாணம்), திருமதி குஞ்சு, திரு. ஆறுமுகம் (K. K. S. Cement Corporation) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளன், தயாநிதி, தர்சன், தயாரூபன், சாளினி, லோகேஸ்வரன், சஜீவன், ரஜீவன், அபர்ணா, இனியா, தனஞ்சேனன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலம் சென்ற வயிரமுத்து, தம்பையா, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற இராசாவின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-02-1990 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. கதிர்காமத்தம்பி
சே. வேல்முருகன்

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
(1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org